பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 27 செவ்வாய்க்கிழமை 11.01.2022 கதிர் 67

### இனி இது ரகசியம் அல்ல!

குழம்பிப் போய்க் கிடக்கின்றது தென்னிலங்கை அரசியல். அது எந்தத் திசையை நோக்கி இனி நகரும் என்பதுதான் கேள்வி.

'ராஜபக்ஷ யுகம்' அதன் அந்திம காலத்தை நெருங்குகின்றது என்பது பெரும்பாலும் உறுதி. அதில் தென்னிலங்கை பக்கம்02

# 340 உள்ளூராட்சி மன்றங்களினதும் பதவிக் காலமும் ஓராண்டுக்கு நீடிப்பு

## விசேட வர்த்தமானி அறிவிப்பு நேற்றிரவு வெளியானது

(ந.லோகதயாளன்)

கொழும்பு, ஜனவரி 11

நாட்டில் உள்ள 340 உள்ளூராட்சி சபைகளினதும் பதவிக் காலம் ஒரு வருடம் நீடிக்கப்பட்டிருக்கின்றது.

24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகளின் பதவிக் காலத்தை 2023 மார்ச் 19 ஆம் திகதி வரை நீடிக்கும் வர்த்தமானி அறிவித்தலை பொதுநிர்வாகம், உள்விவகாரம், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன் நேற்றிரவு விடுத்துள்ளார்.

2018 மார்ச்சில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் தெரிவான இந்த சபைகளின் பதவிக் ☞2

# மைத்திரி அணியை உடன் வெளியேற்று!

## மொட்டுக் கட்சிக்குள் வலுக்கும் எதிர்ப்பு

**அரசிலிருந்து மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடனடியாக வெளியேற்றுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் சிலர் கட்சித் தலைமைப்பீடத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.** ☞2

# பாதையை மாற்றாவிடின் கோட்டாபய அரசு கவிழும்

## அமைச்சர் விமல் எச்சரிக்கை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தற்போது பயணிக்கும் பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் கவிழ்வது உறுதி. ஆனால், இந்த அரசு வீழ்வது எப்போது என்று இப்போது கூற முடியாது. ☞9



# 4 வலயங்களாகப் பிரித்து ஒரு மணி நேர மின்வெட்டு

## அட்டவணை வெளியீடு

நாட்டை நான்கு வலயங்களாகப் பிரித்து மாலை 5.30 முதல் இரவு 9.30 மணி வரை தினமும் ஒரு மணித்தியால மின்வெட்டு அமுல்படுத்துவது தொடர்பான அட்டவணையை ☞2

# ஆட்சிக் காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பா?

## சுதந்திரக் கட்சி போர்க்கொடி

சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி அரசின் பதவிக் காலத்தை நீடித்துக்கொள்வதற்கான முயற்சியில் இறங்கக்கூடாது. அந்த முயற்சி ஒருபோதும் கைகூடாது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

'கொரோனாப் பெருந்தொற்றால் உங்களுக்கு இரண்டு வருடங்கள் இல்லாமல்போய்விட்டன. சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி ஏன் அந்தக் காலத்தைப் ☞9

# பெறுமானம் சேர்க்கின்ற அரசியலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அழைப்பு



பாரம்பரிய அரசியலில் இருந்து விலகி நாட்டுக்கு மதிப்புச் சேர்க்கும் அரசியலில் ஈடுபட அனைத்துத் தரப்பினருக்கும் தான் அழைப்பு விடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ☞9

# மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுமா?

## அமைச்சர் கம்ம்மன்பில பதில்



அடுத்த 10 நாள்களுக்குத் தேவையான எரிபொருள் பெற்றோலியக் கூட்டுத்தாபன வசம் இருக்கின்றது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தற்போது இலங்கை பெற்றோலியக் ☞2

# ஜன. 18 முதல் வீட்டுக்கு வந்து மருத்துவம்!

யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தால் எதிர்வரும் ஜனவரி 18ஆம் திகதி முதல் வீட்டில் இருந்து மருத்துவமனைக்கு அழைத்துவர முடியாத நிலையில் உள்ள முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மோசமடைந்து செல்லும் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், ☞9

# சஜித்தின் கூட்டணியில் மைத்திரிக்கு இடமில்லை

## பொன்சேகா திட்டவட்டம்

மைத்திரிபால சிறிசேனவுடன் எமக்கு எந்தவொரு கொடுக்கல் - வாங்கலும் இல்லை. அவருடன் எமது கட்சி கூட்டணி அமைக்காது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் சூழ்ச்சி ☞9

# விக்கிக் கட்சிக்கு கிடைத்தது அங்கீகாரம்

(ந.லோகதயாளன்)

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் ☞2

# கொழும்பில் நேற்று மாத்திரம் மூன்று ஆண்களின் சடலங்கள்

கொழும்பில் நேற்று மாத்திரம் மூன்று ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கொலன்னாவைப் பகுதியிலுள்ள கால்வாய் ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 56 வயதான நபர் என உயிரிழந்தவரின் உறவினரால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அதேவேளை, நேற்றுப் பகல் வேளையில் பம்பலப்பிட்டி மற்றும் வெள்ளவத்தை ☞9

# குட்டித் தேர்தல் ஒத்திவைப்பு; மைத்திரிபால கடும் எதிர்ப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் அரசின் திட்டத்துக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

உரிய காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சி ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விமர்சகர்கள் பலருக்கும் சந்தேகமும் இல்லை.

கோட்டாபயவை அதிகாரத்துக்குக் கொண்டு வரத் துடியாத் துடித்த தென்னிலங்கை புத்திஜீவிகளின் அமைப்பான 'வியத்மக' இப்போது வொறிச்சோடிப் போய்க் கிடக்கின்றது. தாங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்த தப்பான தீர்மானத்தை எண்ணித் தங்களைத் தாங்களே நொந்து கொண்டு, அந்தப் புத்திஜீவிகள் பலரும் ஒதுங்கிக் கொண்டும் விட்டனர்.

நாடு முழுவதும் கியூ யுகம். எங்கு பார்த்தாலும் அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை பற்றியே பேச்சு. பாணுக்குக் கியூ. பாலுக்குக் கியூ. காஸ் சிலிண்டருக்குக் கியூ என்று மீண்டும் வரிசையில் நிற்கும் காலத்தில் என்ன முகத்துடன் மக்கள் மத்தியில் மீண்டும் முழிப்பது என்பதுதான் கோட்டாபயவுக்கு முண்டு கொடுத்த உள்ளூர் அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகளின் நிலை.

போதிய அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லாததால் எரிபொருள் இல்லை, அதனால் மின் வெட்டு என்று, மின்சாரம் துண்டிக்கப்படும் போது பொது மக்கள் ஆட்சிப் பீடத்துக்கு எதிராகக் கொதித்தெழுவர் என்பது நிச்சயம்.

போகின்ற போக்கில் பெற்றோல் நிலையங்களிலும் கியூவில், பங்கீட்டு அடிப்படையில் எரிபொருள் நிரப்பும் நிலை விரைவில் வருவது தவிர்க்க முடியாதது என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

நாட்டில் மனித உரிமைகள், நீதி, நியாயம் பற்றி சிந்தித்திருக்காவிட்டாலும், குறைந்த பட்சம் பொருளாதார நிலைமையையாவது கருத்தில் எடுத்து தென்னிலங்கை மக்கள் வாக்களித்திருக்க வேண்டும். அதை விடுத்து வெறுமனே பௌத்த – சிங்களப் பேரினவாதச் சிந்தனையை மட்டும் கருத்தில் எடுத்து வாக்களித்த மக்கள் அதன் பலனை அனுபவிக்கின்றார்கள் என்றார் தென்னிலங்கையின் – இடதுசாரிச் சிந்தனைப் போக்குடைய – ஓர் அரசியல் விமர்சகர்.

"அரசுக்கு எதிரான மக்களின் இந்த எரிச்சலுணர்வை நல்ல அரசியல் வாய்ப்பாக – சந்தர்ப்பமாக –பயன்படுத்தும் தந்திரோபாயம் எதிரணியிடம் இல்லாதமை ஆட்சித் தரப்புக்கு, ஒரு நல்ல 'பிளஸ் பொயிண்ட்'. ஒரு 'கரிஸ்மா' மிக்க தலைவர் என்ற இடத்தை சஜித் பிரேமதாஸா பிடிக்கும் சாத்தியமே தென்படவில்லை. அவரை வைத்துக் கொண்டு – முன்னிலைப்படுத்திக் கொண்டு – ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்புவது என்பது கஷ்டம். சரியோ, பிழையோ அந்தத் தந்திரோபாயம் ரணிலிடம் இருந்தது. தமது தலைமைத்துவத்தை மைத்திரிக்கு விட்டுக் கொடுத்து, ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்பும் வியூகத்தை அவரால் வகுக்க முடிந்தது. ஆனால், அத்தகைய தந்திரோபாயம் எதையும் வகுக்கும் அரசியல் முதிர்ச்சி ஏதும் சஜித்திடம் இருப்பதாகவே தெரியவில்லை." –என்றும் அவர் கூறினார்.

அவர் சுட்டிக்காட்டிய இன்னொரு விடயம் முக்கியமானது.

"இன்று – இத்தகைய அரசியல், பொருளாதார வாழ்வாதார நெருக்கடி சூழலில், மஹிந்த ராஜபக்ஷ போன்ற வலிமையான எதிர்க்கட்சித் தலைவர் இருந்திருந்தால் ஆட்சியாளர்கள் கதிரையில் அமர்ந்திருக்கவிட்டு வைத்திருப்பாரா? ஒரு இரண்டு கிழமைக்கு நாட்டையே முடக்கி, மக்களை வீதிகளில் திரட்டி, வீதிகளில் அடுப்பு மூட்டி, கஞ்சி காய்ச்சிக்குடிக்கும் போராட்டத்தை முன்னெடுத்து, நாட்டின் மூலை முடுக்கில் இருக்கும் ஒவ்வொருக்கும் இன்றைய அவல நிலையை உறைப்பாக எடுத்துரைத்திருக்க மாட்டாரா?" என்று கேட்ட அவர் இன்னொரு விடயத்தையும் கொன்னார்.

"இந்த இக்கட்டு நிலைமையை பெரும் அரசியல் சாதக சூழ்நிலையாக மாற்றி, ஒரு மக்கள் எழுச்சியையே தமக்கு சாதகமாகத் திரட்டிக் கட்டி எழுப்புவதை விடுத்து, ஏதோ நாட்டின் தலைவர் மாதிரி தம்பாட்டின் ஊர் ஊராக 'விஸிட்' அடித்து பிரபலம் பண்ணிக் கொண்டு திரிகின்றார் அவர்." – என சஜித்தை ஒரு வாங்கு வாங்கினார்.

உண்மைதான். அரசின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்புணர்ச்சியை அரசியல் கிளர்ச்சியாக மாற்றும் தந்திரம் – சூத்திரம் –இன்றைய எதிரணிக் கட்சிகளின் தலைவர்களுக்குக் கிடையவே கிடையாது என்பது போலத்தான் தோற்றுகின்றது.

★ ★ ★

தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்தவை) ஒன்றித்து இந்தியப் பிரதமருக்கு முகவரியிட்டு ஒப்பமிட்ட ஆவணம் இன்று மாலை 6.30 மணிக்கு கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் வைத்து தூதுவரிடம் கையளிக்கப்பட விருக்கின்றது.

இந்த ஆவணத்தில் ஒப்பமிட்ட தலைவர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா ஆகியோருடன் கூட்டமைப்புப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், ரெலோ பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் ஆகியோர் ஒன்று சேர்ந்து போய் இந்தக் கடிதத்தை கையளிக்கவிருக்கின்றர் என்று தெரிகின்றது.

இந்த நிகழ்வில், நீதியரசர் விக்னேஸ்வரன் பங்கு பற்றச் செல்வார் எனின், பக்கத்தில் வரும் சம்பந்தனுடன் சமதையாகச் செல்லும் போது அவர் முகத்தில் ஒரு கம்பீரம் இருக்கும்.

"எட்டரை வருடங்களுக்கு முன்னர் சிவனே என்று ஓய்வெடுத்துக் கொண்டு சிவபூசையில் இருந்த என்னை வருந்தி – வலிந்து – அரசியலுக்கு இழுத்து வந்தீர்களே. விளைவை – நீங்கள் தேடிய வினையை – பார்த்தீர்களா? நீங்கள் அன்பளித்த பதவியை வைத்தே, நான் அரசியலில் ஏறி, உங்கள் கூட்டமைப்பின் எம்.பி. பதவி ஒன்றைச் சுளையாகப் பறித்துக் கொண்டேன். இப்போது அங்கீகரிக்கப்பட்ட தனிக் கட்சியின் தனித்துவத் தலைவன் நான். பார்த்தீர்களா?" – என்ற தொனி அவர் பார்வையில் இருக்கும். தலைகுனிந்து பார்த்திருப்பதைத் தவிர வேறு மார்க்கம், சம்பந்தனுக்கும் இருக்காது...!

– மின்னல் –

## மைத்திரி அணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனிவழிப் பயணத்துக்குத் தயாராகிவிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், திட்டமிட்ட அடிப்படையில் அரசை விமர்சிக்கின்றனர் எனவும், அரசுக்குள் இருந்து கொண்டு அவர்கள் இவ்வாறு செயற்படுவதால் அது அரசுக்கே பாதகமாக அமையும் எனவும் 'மொட்டு'க் கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பில் முடிவொன்ற எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில், இது சம்பந்தமாக கட்சி மேல் மட்டம் பரீசிலித்து வருகின்றது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விக்கிக் கட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புதிய லங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை புதிய அரசியல் கட்சிகளாக அங்கீகாரம் பெற்றுள்ளன.

## 340 உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலம் நான்கு ஆண்டுகளின் முடிவில் - 2022 மார்ச் 19 இல் - முடிவடைய இருந்த சமயத்தில் இப்போது மேலும் ஓராண்டுக்கு அது நீடிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை சட்டப்படி ஓராண்டு காலத்துக்கு மட்டுமே இப்படி அமைச்சரினால் நீடிக்க முடியும். அதனை அவர் இப்போது செய்துள்ளார்.

## மீண்டும் எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூட்டுத்தாபனத்திடம் சுமார் 150 மில்லியன் டொலர் இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், ஜனவரியில் நுகரப்படும் எரிபொருளுக்கு நாட்டுக்கு 350 மில்லியன் டொலர் தேவைப்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்கால எரிபொருள் இறக்குமதிக்கு சுமார் 200 மில்லியன் அமெரிக்க டொலர் பற்றாக்குறை உள்ளது.

நிலுவைத் தொகையை உடனடியாக வழங்குமாறு இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்படும்.

அதன்படி, இம்மாத எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மேலும் 200 மில்லியன் டொலரை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த 10 நாள்களுக்கு தேவையான எரிபொருள் பெற்றோலிய கூட்டுத்தாபன வசம் இருக்கின்றது. அமைச்சரவையால் பணம் வழங்கப்படும் என நம்புகின்றோம் – என்றார்.

இதேவேளை, ஜனவரி நடுப்பகுதிக்குள் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது எனச் சில தினங்களுக்கு முன்னர் வானொலி நிலையம் ஒன்றில் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குட்டித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சபைகளின் பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடங்களுக்கு நீடிப்பதற்கான அதிகாரம் துறைசார் அமைச்சருக்கு இருக்கின்றது. அந்த அதிகாரத்தை பயன்படுத்தி அவர் வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிடவுள்ளார்.

அவ்வாறு வெளியிட்டால் தேர்தலும் ஓராண்டுக்கு ஒத்திவைக்கப்படும். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தேர்தல் ஒத்திவைப்புக்கு மைத்திரிபால போர்க்கொடி தூக்கியுள்ளார்.

## 4 வலயங்களாகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கை மின்சார சபை நேற்று வெளியிட்டுள்ளது.

அதற்கமைய திங்கள் முதல் சனிக்கிழமை வரை, தினமும் சுழற்சி முறையில், இவ்வாறு மின்வெட்டு அமுல்படுத்தப் படவுள்ளது.


ஐக்கிய மக்கள் சக்தி
සමගි ජන බලවේගය



நல்லூர் தொகுதி
பொதுக்கூட்டம்

காலம் - 12.01.2022
நேரம் - 10.00 மு.ப
இடம் - இளங்கலைஞர் மன்றம்
சட்டநாதர் வீதி, நல்லூர்

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நல்லூர் தொகுதி
அமைப்பாளர் அ.கிருபாகரன் அவர்களின் தலைமையில்
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும்
எதிர்க் கட்சி தலைவருமாகிய
கௌரவ சஜித் பிரேமதாச
அவர்கள் பங்குகொள்ளும் இந் நிகழ்வில் மக்களாகிய
நீங்கள் அனைவரும் கலந்து சிறப்பித்து எமது நாட்டின்
எதிர்கால சுபீட்சத்துக்காக நாம் இணைந்து செயற்படுவோம்.

அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.



# ராஜபக்ஷ ஆட்சியின் புகழ் வீழ்ச்சியடைவை ஏற்கிறேன்

## ஒப்புக்கொள்கிறார் நாமல்



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுடன், ராஜபக்ஷ ஆட்சியின் புகழ் வீழ்ச்சியடைந்துள்ளதை ஏற்றுக்கொள்வதாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியவை வருமாறு -

எனினும் இது தற்காலிகமா னது என்றும் இந்த ஆண்டு பொருளாதார நெருக்கடியி லிருந்து மீள்வதற்கான திட்டங்கள் நடைபெற்று வருகின் றன எனவும் கூறியுள்ளார்.

இதேநேரம், இரசாயன உரப் பாவனையைத் தடை செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த தீர்மானம் ஒரு வலுவான முடிவு எனவும் ஆனால் பொறுப்பான அதிகாரிகளால் அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு பதவியேற்றவுடன், இரசாயன மற்ற உரத்திற்கு மாறுவதற்கான தனது முடிவை ஜனாதிபதி அறிவித்தார் எனவும் ஆனால் அதிகாரிகள் அதைத் தொடராததமையால் அதைத் தவறவிட்டதாகவும் நாமல் கூறியுள்ளார்.

இரசாயன உரத்துக்கு மாறுவதற்கான செயல்முறை உள்ளது என்பது உண்மைதான் என்றும் அது 10 ஆண்டுகளாகக் கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் செயற்படாதமையால் இறுதியாக ஜனாதிபதி கடுமையான தீர்மானமொன்றை எடுக்க நேரிட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, தலைவர்கள் தங்கள் தேசத்தின் முன்னேற்றத்துக்காக இதைச் செய்ய வேண்டும் என்றும் நாமல் கூறியுள்ளார்.

# பகலில் மின்வெட்டு அமுல்படுத்தப்படா!

## இலங்கை மின்சார சபை



நாட்டில் பகலில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது என இலங்கை மின்சார சபை நேற்று (திங்கட்கிழமை) தெரிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தேவையான எரிபொருள் இருப்புக்களை வழங்க இணங்கியுள்ளதால் இம்மாதம் மின்வெட்டை அமுல்படுத்தவேண்டிய தேவையில்லை என அந்த மின்சார சபையின் பொது முகாமையாளர் எம்.ஆர். ரணதுங்க ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 05 நாள்களுக்கு போதுமான எரிபொருள் தற்போது கிடைத்துள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் 300 மெகாவோட் மின்சார இழப்பு காரணமாக, நாட்டில் மின்சார விநியோகம் தற்போது எரிபொருளில் தங்கியுள்ளது.

இந்நிலையில், நிலக்கரி தட்டுப்பாடு ஏற்பட்டால் மின்வெட்டு ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறிருப்பினும் நாளாந்தம் இரண்டரை மணித்தியாலங்களுக்கு மின் வெட்டை அமுல்படுத்த பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு, இலங்கை மின்சார சபைக்கு நேற்று அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.











தாயகம் அறக்கொடை நிறுவனத்தினால் 02.01.2022 ஞாயிற்றுக்கிழமை வன்னி விழிப்புணர்வற்றோர் சங்கத்தின் நூறு குடும்பங்களிற்கு ஒரு லட்சத்து 33 ஆயிரம் ரூபா பெறுமதியான பொங்கல் பானையுடனான பொதிகளும் கல்வி கற்கும் 100 அங்கத்தவர்களின் சிறார்க ளுக்கு ஒரு லட்சத்து 67 ஆயிரம் ரூபா பெறுமதியான 100 காலணிகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் தாயகம் அறக்கொடை நிறுவனத்தின் நிறுவுநர் வீ.ஸ்ரீதரன் பங்குபற்றி சிறப்பித்தார்.

# இயற்கை விவசாய வாரத்தை முன்னிட்டு கிளைமைத்தோன் உரையாடல் நிகழ்வு




இயற்கை விவசாய வாரத்தை முன்னிட்ட கிளைமைத்தோன் உரையாடல் நிகழ்வானது மரபுப் பயிர்களின் அழிவும் உருக்குலையும் உழவுத் தொழிலும் எனும் தலைப்பில் நாளை (புதன்கிழமை) இரவு 7.30 மணிக்கு இணையவழியில் நடைபெறும்.

நிகழ்வின் அதிதிப்பேச்சாளராக சூழலியலாளர் திரு.பொ.ஐங்கரநேசன் (விவசாயத்துறை முன்னாள் அமைச்சர், வட மாகாணம். தலைவர், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்) அவர்கள் கலந்துகொள்வார். நிகழ்வில் கலந்துகொள்வோர்களுக்கான பதிவுகளை மேற்கொள்வோருக்கு, மின்னியல் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சூம் செயலியில் இணைந்து கொள்ள
Meeting ID: 863 4987 6702
Passcode: yarl2022

# திரவ பால், பால் மாவின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு மாற்று நடவடிக்கை

ஐஸ்கிறீம் மற்றும் தயிர் உற்பத்தி விகிதத்தைக் குறைத்து திரவ பால் மற்றும் பால் மாவின் உற்பத்தி விகிதத்துக்கு முன்னுரிமை அளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சந்தையில் பால் மாவுக்கான தட்டுப்பாட்டைக் குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நடமாடும் சேவையின் ஊடாகத் திரவப் பாலை விநியோகிக்கும் முயற்சி உட்பட நாளாந்த பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என கால்நடை இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்துள்ளார்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)

* முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2019
* இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2019

மேற்படி பரீட்சைகளினை 16.01.2022 (ஞாயிற்றுக்கிழமை) தொடக்கம் 30.01.2022 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணை, பரீட்சை அனுமதி அட்டையினை 11.01.2022 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் 13.01.2022 (வியாழக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 - 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**10.01.2022**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## வெளிப்படுகிறது சீன ட்ரகன்

சர்வதேச இராஜதந்திர உறவாடலில் 'மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும்' இலங்கையின் இரட்டை வேட அணுகுமுறை எவ்வளவு காலத்துக்குத் தாக்குப் பிடிக்கும் என்பதுதான் கேள்வி.

'ஒரு புறம் வேடன்; மறுபுறம் நாகம்' என்ற மாதிரி இரட்டை நெருக்கடிகளுக்கு மத்தியில் தனது இராஜதந்திர விளையாட்டை நடத்திக் கொண்டிருக்கின்றது இலங்கை.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருப்பதால், இந்தப் பிரதேசத்தில் மிகச் சிறிய தீவாக இருந்தும், வல்லாதிக்க சக்திகளின் ஊடாட்டத்துக்கு மத்தியில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது இலங்கை.

அந்த முக்கியத்துவத்தை வைத்துக் கொண்டு இராஜதந்திர விளையாட்டை சாணக்கியமாக விளையாடும் இலங்கை, இப்போது, தன் நகர்வுகள் மூலம் தன்னைத் தானே இரு தலைக் கொள்ளி எறும்பு போல மாட்ட வைக்கப் போகின்றது என்றே தோன்றுகின்றது.

ஒரு புறம் இந்தியா, அமெரிக்கா போன்றவற்றுடன் வலுவான மேற்கு நாடுகள்.

மறுபுறம் பொருளாதார ரீதியிலும் வல்லாதிக்க சக்தியிலும் விஸ்வரூபம் எடுத்து வரும் சீனா.

இலங்கையை வைத்துக் கொண்டே – அதன் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் சிக்கல்களுக்கு உதவும் சாக்கில், அதற்குள் ஊடுருவி, இந்தியாவுக்குக் குடைச்சல் கொடுக்கும் தனது கைவரிசையை கனகச்சிதமாகக் கட்டவிழ்க்கின்றது சீனா.

இலங்கை தொடர்பில் சீனா எடுக்கும் நடவடிக்கைகள் இலங்கைத் தீவை ஒட்டியிருக்கும் பரந்த பாரத தேசத்துக்கு வயிற்றில் புளியைக் கரைப்பதாக இருப்பது கவனிக்கத் தக்கது.

இது வரை காலமும் இலங்கைக்கு உதவிகளை பொருளாதார ரீதியிலும், கடன் அடிப்படையிலும் வழங்கி வந்த சீனா திடீரென தனது 'டியூனை' மாற்றத் தொடங்கியது.

இலங்கை – சீனச் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை அது முன்வைத்தது.

அதுவும் சீன வெளியுறவு அமைச்சர் நேற்றுமுன்தினம் கொழும்பில் நின்ற சமயம், தெரிவு செய்யப்பட்ட கொழும்புப் பத்திரிகையாளர் குழு ஒன்றைச் சந்தித்த கொழும்புக்கான சீனத் தூதுவர் இந்த விடயத்தை அப்போது வலியுறுத்தினார்.

இத்தகைய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை சீனாவுடன் செய்ய முற்படுவது, இலங்கைப் பொருளாதாரத்தில் சீனாவின் அதீத தலையீட்டுக்கு வழி செய்யும் என்ற அடிப்படையில் அந்த நடவடிக்கையை கடந்த நல்லாட்சி அரசு கிடப்பில் போட்டிருந்தது அல்லது இடைநிறுத்தியிருந்தது என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

அதைத்தான் சீனத் தூதுவர் மீண்டும் தூக்கிப் பிடித்துப் புதுமெருகுடன் கொழும்பின் தலையில் கட்டப் பார்க்கின்றார் எனப் பலரும் எதிர்பார்த்த சமயத்தில்தான், அவர் இப்போது புதுக்குண்டு ஒன்றையும் தூக்கிப் போட்டியிருக்கின்றார்.

சீன வெளியுறவு அமைச்சர் கொழும்பில் இருந்த போது இலங்கை – சீன திறந்த வர்த்தக ஒப்பந்தம் பற்றிப் பேசிய அவர், இப்போது சீன அமைச்சர் தமது கொழும்புப் பயணத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டதும், இலங்கை – சீன பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யப்பட்ட வேண்டும் என்ற சாரப்பட கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

"இந்தப் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் அமைதிக்கும் இலங்கையும் சீனாவும் பாதுகாப்பு விடயத்தில் கூட்டுச் செயற்பாட்டுக்கு இணைவது மிக அவசியம் என நான் கருதுகிறேன்.

"சீனாவுக்கும் இலங்கைக்கும் அவற்றின் இறைமை, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை போன்றவை தொடர்பான பொதுவான நலனுக்கு மட்டுமல்லாமல், இந்தப் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் சுபீட்சத்துக்கும் கூட இத்துறையில் (பாதுகாப்புத் துறையில்) இரு நாட்டு ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என நான் கருதுகிறேன்" – என்று கூறியிருக்கின்றார்.

சீனப் பூதம்(ட்ரகன்) தன் தோற்றத்தைக் காட்டத் தொடங்கி விட்டது என்பதுதான் இதன் அர்த்தம்.

# சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் சகல மாணவர்களும் பின்பற்றவேண்டும்

## உபுல் றோஹண அறிவுறுத்தல்



அனைத்து மாணவர்களும் சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் பின்பற்ற வேண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

அனைத்து தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட்டால் கற்றல் நடவடிக்கைகளை இடையூறுகள் இன்றித் தொடர முடியும் என அச்சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்தார்.

மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நேற்று (திங்கட்கிழமை) முதல் வழமை போன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

கொரோனா அறிகுறி தென்பட்டால் அல்லது நோயாளியின் நெருங்கிய தொடர்புடையவராக இருந்தால் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதைத் தவிர்க்குமாறும் பெற்றோரிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, பாடசாலைகளில் கொரோனாத் தொற்று அறிகுறிகள் கண்டறியப்பட்டால் எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள் தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் பிற ஊழியர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன எனவும் உபுல் றோஹண தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று சூழலுக்கு மத்தியில் பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்வதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொறுப்பதிகாரி கடமைகளை ஏற்றார்!



வவுனியா பொலிஸ் நிலையத்துக்கான தலைமைப் பொலிஸ் நிலைய புதிய பொறுப்பதிகாரி கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நம்புக்கணை பொலிஸ் நிலையத்தில் உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய ஜே.ஏ.ஏ.எஸ். ஜெயக்கொடி நேற்று (திங்கட்கிழமை) காலை 10.26 என்ற சுபநேரத்தில் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்று கொண்டார்.

வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ.மானவடு கடந்த புதன்கிழமை கொஸ்வத்தை பகுதிக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதையடுத்து அந்த வெற்றிடத்துக்கு ஜெயக்கொடி பொலிஸ்மா அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் சமயத் தலைவர்களின் ஆசியுடன் புதிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# செய்தித்தாள்களை அச்சிடும் காகிதங்களுக்குத் தட்டுப்பாடு

நாட்டில் தற்போது அனைத்து அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் இதர பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், தற்போது செய்தித்தாள்களை அச்சிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் காகிதங்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், சகல பத்திரிக்கை தொழிற்துறையினரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

டொலர் தட்டுப்பாடு மற்றும், உலகளவில் காகிதங்களின் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி என்பன இதற்குப் பிரதான காரணங்களாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக செய்தித்தாள்களை அச்சிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் காகிதங்களின் விலை, கடந்த மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் இரட்டிப்பாக அதிகரித்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில், ஒரு தொன் காகிதம் 450 அமெரிக்க டொலராகக் காணப்பட்ட நிலையில், தற்போது, 800 அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால், செய்தித்தாள்களின் உற்பத்தி செலவினம் அதிகரித்துள்ளதுடன், பத்திரிகைத் தொழிற்துறையினர் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போராளி பண்டிதரின் 37 ஆம் ஆண்டு நினைவு அவரது வீட்டில் நடந்தது

## மணி, சிவாஜி பங்கேற்பு

*(ந.லோகதயாளன்)*

*யாழ்ப்பாணம், ஜன.11*

*விடுதலைப் புலிகளின் முன்னாள் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான பண்டிதர் உயிர்நீத்து 37 ஆம் ஆண்டே அவரது வீட்டில் நினைவு கூறப்பட்டது.*

*யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக செயற்பட்ட பண்டிதர் 1985 ஆம் ஆண்டு ஆவரங்கால்ப் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட சமரில் உயிர் நீத்திருந்தார்.*

*வல்வெட்டியை சொந்த இடமாக கொண்ட பண்டிதர் ஒருவரின் காட்டிக்கொடுப்பின் காரணமாக உயிரிழந்த நிலையில் அவரது இல்லத்தில் நேற்றைய தினம் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம், மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் வ.பார்த்தீபன் ஆகியோர் நேரில் வீட்டிற்கு சென்று அஞ்சலி செலுத்தினர்.*

காலைக்கதிர் Kalaikkathir

# மரண அறிவித்தல்



## விநாயகமூர்த்தி நீலலோஜனன்

(இலங்கை வங்கியின் இளைப்பாறிய முகாமையாளர்)

இலங்கை வங்கியின் இளைப்பாறிய முகாமையாளர் விநாயகமூர்த்தி நீலலோஜனன் கொழும்பில் கடந்த ஞாயிறன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மு.விநாயகமூர்த்தி – கங்காதேவி தம்பதியரின் அன்பு மகனும், கொழும்பு றோயல் கல்லூரியின் இளைப்பாறிய விஞ்ஞான ஆசிரியை புஷ்பராணியின் கணவரும், அமரர் ஷயாகுமாரி சிறிகாந்தா, ஷர்ணியகுமாரி விக்னராஜா ஆகியோரின் சகோதரரும், ஸ்ரீகாந்தா, விக்னராஜா, நாகதாசன் (இளைப்பாறிய விவசாயப் பிரதிப் பணிப்பாளர்), சிவதாசன், நிர்மலராணி பூலோகசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், திருமதி நிஷோதா அனுராஜ் (பிரதி அதிபர், Gateway சர்வதேச பாடசாலை, ராஜகிரிய), நிஷாந்தனன் (இலத்திரனியல் பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சி.அனுராஜ் (நிர்வாக இயக்குநர், பசுமை ஊடக இல்லம்), திருமதி லோரா மெலன் ஆகியோரின் மாமனாரும், அ.பிரியன் (தரம் 10, Gateway மாணவன்), அ.பூர்ணிமா (தரம் 6, Gateway மாணவி) ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை புதன்கிழமை 12ஆம் திகதி காலை 8 மணி முதல் கொழும்பு, பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பிற்பகல் 3 மணி முதல் இறுதி கிரியைகள் நடைபெற்று, மாலை 4.30 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:குடும்பத்தினர்**



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 248

### 638.சன்சோனி ஆணைக்குழுவிற்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தின் சமர்ப்பணம் எவ்வாறு அமைந்தது?

விடுதலை கூட்டணியினர் – முக்கியமாக அமிர்தலிங்கம் – சுதந்திரத் தமிழீழத்துக்கு மக்கள் பெரும்பான்மையாக ஆதரவு தந்தமையால், அவர்களது நம்பிக்கைக்குத் துரோகமிழைக்காமல், சுதந்திரத் தமிழீழமே, இப்படியான வன்முறைகள் மேலும் நடக்காமல் இருப்பதற்கான நிரந்தரத் தீர்வு என சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று நிர்ப்பந்தித்தார்கள்.

இளைஞர்கள் சார்பில் நிதியத்தோடு பெருமளவில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு பங்கு பற்றியவர்களில் உமா மகேஸ்வரன், மண்டூர் மகேந்திரன், ஊர்மிளா, சந்ததியார், திலகவதி, பரராஜசிங்கம் (பேபி) மற்றும் காந்தீயத்துடன் இணைந்து இயங்கிய பல தோழர்கள் – இவர்களில் நான் அறிந்தவரையில் சிலர் இளைஞர் பேரவையுடனும் விடுதலை கூட்டணியின் கொழும்பு கிளையுடனும் இணைந்திருந்து, அதேசமயம், விடுதலை புலிகளுடனும் தொடர்பில் இருந்தார்கள். உமா மகேஸ்வரன் விடுதலை புலிகளின் மத்திய குழுவிற்கு உள்வாங்கப்பட்டு, பின் அதன் தலைவராகவும் பங்கு பற்றினார் என்பது எங்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. அவர்களும் தனித் தமிழீழக் கோரிக்கை கைவிடப்படக் கூடாது என்பதை வலியுறுத்தினார்கள். இளைஞர்களுடனான சமபாஷணைகள் பல கூட்டணியின் கொழும்பு கிளைப் பிரமுகர்கள், முக்கியமாக ஐ.தி.சம்பந்தனது ஏற்பாடுகளில் நடந்தது.

இவர்களுடன் நடந்த பேச்சுவார்த்தைகளில், சமர்ப்பணத்திற்காக நடத்தப்பெற்ற ஆய்வுகளும், கணக்கெடுப்புகளும், தெளிவாகத் தெரிவித்தவைகளைச் சுட்டிக்காட்டி, அரசியல் சுலோகங்களை நிலைப்படுத்த, அவற்றுக்கு பின் போகாது, தமிழ் மக்களின் வாழ்வு முறைகளையும், எதிர்பார்ப்புகளையும் அனுசரித்து, யதார்த்தமாக, அவர்கள் சிங்கள மக்களுடன் சமாதானமாக வாழ்வதையே விரும்புகிறார்கள் என்பதை வலியுறுத்த வேண்டும், அதற்காக சன்சோனியின் பரிந்துரைகளும் கோரப்படவேண்டும் என்பவை சுட்டிக்காட்டப்பட்டன. அச்சமயங்களில் சுதந்திரமான நாட்தொட்டு, தமிழ் மக்கள் அரசாங்க உத்தியோகங்களிலே அங்கலாய்த் திருந்தும் தங்களது பிரதேசங்களில் தனியார் துறைகளை ஊக்குவிக்க அக்கறையில்லாதிருப்பதும், அப்படி எதுவும் ஆக்கப்பட்டால் அவை சாதிமிடுக்குகளால் சீரழிவதும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தங்கள் பிரதேசங்களின் காணிகளில் அக்கறைகள் கொண்டு குடியேறி அவற்றை ஆட்சிப்படுத்துவதை விட்டு, எங்களது பிரதேசம் என்ற கோரிக்கையை, ஏதோ ஒரு வித உறுதி போல் பாவிப்பது என்பன சுட்டப்பட்டன. யாழ்ப்பாண காணி அதிபர் ராஜதுரை, சுற்று நிரூபங்களுக்கு மாறாக நடக்கிறார் எனப் பதவி மாற்றப்பட்டபோது, தான் பதவியிலிருந்த நடுச்சாமம் வரை, வவுனியா, யாழ்ப்பாணம் ரயில் நிலையங்களிலிருந்தும் காணி உறுதிகளுக்குக் கையெழுத்து வைத்தார் என்ற செய்தியை சமர்ப்பணத்திற்காக புத்திஜீவிகள் ஆராய்ந்தனர். அப்பொழுது அவற்றில் 80 வீதத்திற்கு மேல் யாழ்ப்பாணத்தவர்க்கு, அரச ஊழியத்திலிருந்தோருக்கே வழங்கப்பட்டது என்பது வெளிப்பட்டது. அதில் 2 வீதத்தினர் தன்னும் அவற்றில் குடியிருந்து அவற்றைப் பராமரிக்கவில்லை. அநேகர் கொடுத்ததைத் தக்க வைத்து கொள்ள, யாரையோ இரவலுக்குக் குடியர்த்தி, மேற்பார்வை செய்து கொண்டிருந்தார்கள். தனி நாட்டுக் கோரிக்கை ஒன்றை உறுதிப்படுத்துவதற்கு, தங்களது மண்ணில் வாழ்ந்து, அதனை வளப்படுத்தும் அர்ப்பணிப்புகள் வேண்டும் . அதைவிட்டு, ஆட்சியை பலப்படுத்தாமல், உரிமையின் பேரில், வேலிபோட வேண்டும் என்று கேட்பதில் அர்த்தமில்லை. கவனிக்கப்படாமல் இருந்த காணிகளில், அத்துமீறி நடக்கும் குடியிருப்புகளை கூட சட்டம் ஏற்றுக் கொள்கின்றது. ஆனால் இங்கு அரசு அப்படி நடக்கும் போது தமிழ் மக்கள் உலகின் பல பாகங்களில் நடப்பவற்றிலிருந்து பாடங்கள் கற்று புத்திசாதுரியத்துடன் நடக்க வேண்டும் என்பவையும் சொல்லப்பட்டன. இவற்றை உணர்த்த இளைஞர்கள் எல்லைப் புறக் காணிகளில் குடியேற்றங்கள் செய்ய, எல்லைக் கிராமங்களைப் பாதுகாக்க வேண்டிய நிதர்சனத்தை உணர்ந்தார்கள்.

### 639.சமர்ப்பணம் பின்னர் எவ்வாறு அமைந்தது?

தனிநாட்டு கோரிக்கையை வலியுறுத்தாத சமர்ப்பணத்தில், தமிழர் விடுதலை கூட்டணி, தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் கையொப்பமிட விரும்பவில்லை. அதேசமயம் சிங்கள பேரினவாதத்தால் அவர்களுக்கு எதிராகக தேர்தல் கூட்டங்களில் இனவாத, பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவு தந்தார்கள் என்ற குற்றச்சாட்டுக்களுக்கும் ஆளாகியிருந்தார்கள் என்பதனால் அதையும் காரணமாக்கித் தவிர்த்து கொண்டனர்.

இன்று தமிழர் தகவல் நடுவகம் சமர்ப்பணத்திற்கு கையெழுத்து இட்ட வகையில், அகதிகள் புனர்வாழ்வு நிதியம், அதன் பெயரிலேயே சமர்ப்பணத்தை ஒப்பமிட்டுக் கையளித்தது. சமர்ப்பணத்தின், உட்கூற்று இலக்கங்களின் பிரகாரம்.

72.The real remedy should be found in the political context as without this solution all other solutions will prove merely palliatives but offer no cure.

★ உண்மையான பரிகாரம் அரசியல் தீர்விலேயே அமைய வேண்டும். அப்படியல்லாது செய்யப்படும் எதுவும் ஒரு நோய்தடுப்பு போல், எந்த விதமான குணப்படுத்தலும் இல்லாததாக முடியும்.

73. The Tamils should fed that they are part and parcel of this country.

★ தமிழ் மக்கள் தாம் இந்த நாட்டின் ஒரு பகுதியாளர் என்று எண்ணும் வகையில் நடத்தப்பட வேண்டும்.

74.The Tamils never wanted separation. The candidates who raised this cry in Tamil areas before the 1970 elections lost even their deposits to other Tamil candidates. The fate of V.Navaratnam, the ex M.P. for Kayts, illustrating this theory. So, was the hostile reaction always accorded to Mr.C.Suntharalingam, the ex M.P. for Vavuniya, who was the real farther of the separate nation cry. But the Sinhalese by their immortal acts drove Tamils to seek refuge in such a position. Whether the solution in the present poisoned atmosphere is to grant the right of self determination to the Tamils, so that the Tamils can be brought back to the mainstream of national life as free and willing partners in national building is something their commission can think over.

★ தமிழ் மக்கள் என்றுமே பிரிவினையை விரும்பியவர்களல்லர். பிரிவினை வாதத்தை 1970ஆம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் பகுதிகளில் எழுப்பியவர்கள், தேர்தல்களில் தங்களது கட்டுப்பணத்தையே மற்ற தமிழ் பிரதிநிதிகளிடம் இழந்தார்கள். முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வ.நவரத்தினத்துக்கு நடந்தது இதனை விளக்குகிறது. அதேபோல் முன்னைய நாடாளுமன்ற அங்கத்தினர் சி.சுந்தரலிங்கத்துக்கு, எப்பொழுதும் கொடுக்கப்பட்ட விரோதமான வரவேற்பும் இதைக் காட்டுகிறது. அவர் தான் தனிநாட்டினது கோரிக்கையின் உண்மையான தந்தை. ஆனால் சிங்கள மக்கள் தங்களது ஒழுக்கமற்ற நடவடிக்கைகளால், தமிழ் மக்களை இதைத் தேடுவதற்காக தள்ளியிருக்கின்றார்கள். இன்றைய நச்சுத் தன்மையான சுற்றாடலில், தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமைகளை அளித்து அவர்கள் தேசிய நிரோட்டத்தில், சுதந்திரமாக, விருப்பும் உள்ள பங்குதாரர்களாக, ஒரு தேசத்தை கட்டியெழுப்ப முன்வருவார்களா என்பதை இந்த ஆணைக்குழு சிந்திக்க வேண்டும்.

75. If two nations are born on this small island, it will be the result of a violent up hard which will leave behind so much bitterness among the races for generations to come. This enduring hostility will force them to spend a sizable part of their earnings in maintaining standing armies,if not in waging a continual war, with possible third party interferences and thus pave the way for continual misery for both races.

This is one view.

★ இரண்டு தேசங்கள், இந்த சிறிய தீவில் பிறக்குமானால் அது வன்மையான குழப்பங்களில் அமைந்து, இரண்டு இனங்களுக்கிடையும் சந்ததி, சந்ததியாக பெருமளவு காழ்ப்புணர்வுகளை தோற்றுவிக்கும். அதனால் இரண்டு பகுதிகளுமே தங்களின் பெருமளவு வருமானத்தை, இராணுவ செலவுகளுக்குப் பயன்படுத்தி கொள்ள வேண்டும். அன்றில் தொடர்ந்த யுத்தங்களால், மூன்றாம் தரப்புகள் ஈடுபட்டு இரண்டு இனங்களுக்கும் தொடரும் துயரத்தைதான் தருவார்கள்.

இது ஒரு பார்வை.

76 The other view is the example of Bangladesh. By Bangladesh getting born, the bed blood that existed between Muslims of West Pakistan and the Muslims of East Pakistan got lashed out and these two people are closer to each other than they were in their days of one nationhood.

★பங்களாதேசத்தின் தோற்றம் இன்னுமொரு பார்வை. பங்களாதேசம் பிறந்ததினால் மேற்கு பாகிஸ்தான் கிழக்கு பாகிஸ்தானிடையே இருந்த முஸ்லீம்களின் பகைமை இரத்தங்கள் வெளியேற்றப்பட்டு, அவர்கள் ஒரு நாடாக இருந்த போது, இருந்ததிலும் பார்க்க மேலான நட்புறவில் இருக்கின்றார்கள்.

இது இன்னுமொரு பார்வை.

77. Whether by an imaginative act of statesmanship, the Sinhala majority can convert the Tamils into allies in a common endeavor is something that has to thought out carefully.

★ கற்பனை திறன் கொண்ட அரசாட்சி தன்மையால் சிங்கள பெரும்பான்மை தமிழர்களை ஒரு பொதுத் திட்டத்திற்கு கூட்டாளியாக்குவார்களா என்பது மிகவும் கவனமாகப் பார்க்கப் பட வேண்டும்.

78.One thing is certain. The Tamils will never accept second class status in their own land and every act of the Sinhalese will be met by some response in a similar vein by the Tamils and there is room for eternal conflict if this minority problem is not solved.

★ ஒன்று மட்டும் நிச்சயம். தமிழ் மக்கள் தங்களது நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்கள் என்பதை ஏற்று கொள்ள மாட்டார்கள். சிங்கள மக்களின் எந்த செயற்பாடும் அதைப் போன்றவை மாதிரி தமிழ் மக்களால் எதிர்க்கப்படும். ஆகவே இந்தச் சிறுபான்மை இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் நித்தியமான பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

79.Possibly the Tamils could be wiped out by the Sinhalese with the armed might and state power at their exclusive disposal. But the survivors of this gruesome scenario will not be the Sinhalese of today but a perfectly barbarous race scattered in such a conflict that they will never be able to come to tears with themselves. History will be the Judge.

★ ஒருவேளை தங்களிடமிருக்கும் ஆயுத, அரச பலங்களினால் – அவற்றைப் பிரயோகித்து சிங்கள மக்கள் தமிழ் மக்களை அழித்து விடலாம். ஆனால் இந்தக் குரூரமான காட்சிகளின் பின் அவர்கள் இன்றைய சிங்ளவர் போலிருக்க மாட்டார்கள். அவர்கள் முற்றுமுழுதாக காட்டுமிராண்டி இனமாக தங்களுக்குள்ளேயே பலத்த முரண்பாடுகளுடன் ஒரு விதமான சமாதானங்களும் தங்களுடனேயே ஏற்படுத்தி கொள்ள முடியாத இனமாக வாழ்வார்கள். சரித்திரம்தான் இதனை சொல்லும்.

– இந்த சமர்ப்பணமும் அதன் விளக்க காலங்களில் நெறிப்படுத்தப்பட்ட சாட்சியங்களும் பல வகைகளில் எங்களுக்கு இடர்களைத் தந்து கொண்டிருந்தன. கட்டமைப்புக்கு புத்திஜீவிகளிடமிருந்தும் புலம்பெயரிலும் இருந்து வந்த ஆதரவுகளும், நிதியத்தோடு இயங்கிய இளைஞர்கள் நாங்கள் தமிழ் மக்களை கைவிடமாட்டோம் என்று வெளிப்படுத்திய நம்பிக்கைகளும், அதேபோல் விடுதலை கூட்டணியினரின் ஏற்பும், ஓரளவு நிம்மதியை தந்தன. ஆனால் அவர்கள் மட்டும் தமிழ் பரப்பில் அதிகாரம் சொலுத்தவில்லை.

(வளரும்)

# சஜித் தலைமையில் புதிய ஆட்சி மலரும்

## திகாம்பரம் நம்பிக்கை



நாங்கள் மக்களைக் காட்டிக்கொடுத்து அரசியல் நடத்துபவர்களல்லர். மக்களுக்கான அரசியலையே நடத்தி வருகின்றோம். இனியும் நடத்துவோம். இந்த ஆட்சி விரைவில் கவிழும். சஜித் தலைமையில் புதிய ஆட்சி மலரும். அந்த ஆட்சியில் நாங்கள் அமைச்சராக இருப்போம். மக்களுக்கு பல சேவைகளை வழங்குவோம். என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இராகலை, வலப்பனை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறுரைத்தார்.

இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் உடப்புஸ்ஸலாவ, இராகலை, வலப்பனை போன்ற பகுதிகளில் உள்ள அங்கத்தவர்கள் சிலர் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரத்துடன் இணைந்து கொண்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.ராம் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர். இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் மேலும் கூறியவை வருமாறு -

நான் மக்களுக்காகவே அரசியல் செய்கின்றேன். மக்களைக் காட்டிக்கொடுத்து அரசியல் செய்பவனல்லன். அப்படி செய்வதாக இருந்தால் 20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவு வழங்கிவிட்டு சொகுசு வாகனங்களைப் பெற்றிருக்கலாம்.

அரசுக்கு வாக்களித்த மக்களே இன்று அரசுக்கு எதிராகத் திரும்பியுள்ளனர். ஆளுங்கட்சியில் உள்ளவர்கள்கூட ஆட்சியைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். பொருள்களின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன. பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடும் நிலவுகின்றது. உர நெருக்கடியால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருந்தோட்டத்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவே மீட்பாரென புகழாரம் சூட்டியவர்களே இன்று அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். 20 வருடங்களுக்கு இந்த அரசை அசைக்க முடியாதென மார்தட்டினர். ஆனால் 2 வருடங்களிலேயே அவர்களது ஆட்சி ஆட்டம் கண்டுவிட்டது.

இப்படி நடக்குமென எமக்குத் தெரியும். அதனால்தான் நாம் எதிரணி பக்கமே இருந்து கொண்டோம். எப்படியும் விரைவில் இந்த அரசு வீட்டுக்கு சென்றுவிடும். உடனே வீட்டுக்கு அனுப்பவும்கூடாது. இந்த ஆட்சியாளர்களின் பலவீனத்தை மக்கள் உணரவேண்டும். அப்போதுதான் இனியும் ஆசைவார்த்தைகளை நம்பி ஏமாறமாட்டார்கள்.

மலையகத்திலும் இராஜாங்க அமைச்சர் ஒருவர் இருக்கின்றார். அவரும் ஜனாதிபதியை கடவுள் என்றார். இப்போது 15 கிலோ கோதுமை மாவுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதையும் வரவேற்றுள்ளார். ஏனையோருக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

தோட்டத்தொழிலாளர்களுக்கு ஒரு கிலோ மாவுக்கு வெறும் 40 ரூபாதான் நிவாரணம். வெட்கமின்றி இதனையும் வரவேற்கின்றனர். சின்ன பையனால் முடியாது என சொன்னோம். நீங்கள் ஒரு லட்சம் வாக்குகளை வழங்கினீர்கள். இன்று நாங்கள் செய்த திட்டங்களை திறக்கும் திறப்பு விழாவைதான் நடத்தி வருகின்றனர். மஹிந்த ராஜபக்ஷ மக்களைப் பார்த்து அன்று 'செபத' என கேட்டார். நாமும் இப்போது சந்தோமா எனக் கேட்கின்றோம்.- என்றார்.

## பிரச்சினைகளுக்குத் தீர்வு பேச்சு மூலமே காணமுடியும்

### தயாசிறி தெரிவிப்பு



அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் ஏற்பட்ட பின்னடைவை சுட்டிக்காட்டி அது தொடர்பாக கலந்துரையாடித் தீர்வு காண வேண்டும் என தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது நிலவும் உர நெருக்கடிக்கு அமைச்சரே பொறுப்பேற்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

அறுவடை காலத்துக்குள் உரம் தொடர்பான புதிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முயற்சித்துள்ளார்எனவும்அவர்கூறினார்.

பேச்சு மூலம் மட்டுமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

## 63 கிலோ கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது!

பொத்துபிட்டிய பகுதியில் 63 கிலோ 20 கிராம் கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவரை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பாணந்துறையிலிருந்து களுத்துறை நோக்கி சென்று கொண்டிருந்த வான் ஒன்றை நேற்று சோதனைக்கு உட்படுத்திய போது அந்த வானிலிருந்து 63 கிலோ 20 கிராம் கேரள கஞ்சா கைப்பபற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 7 லட்சத்திற்கும் அதிகமான பணமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாக்களின் பெறுமதி சுமார் 2 கோடிக்கும் மேல் இருக்கும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கிணற்றில் தவறி வீழ்ந்து யாழில் குழந்தை சாவு!

யாழ்ப்பாணத்தில் கிணற்றில் தவறி விழுந்த குழந்தையொன்று பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஊர்காவல்துறை, நாரந்தனை பகுதியை சேர்ந்த நான்கரை வயதான ஆரணன் விஜேந்திரன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இந்த துயரச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது. விளையாடிக் கொண்டிருந்த குழந்தை தவறுதலாக கிணற்றில் வீழ்ந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

## செந்தில் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டில் வெலிமட கம்பஹா பாடசாலையில் கட்டடம்!

வெலிமட கம்பஹா பாடசாலையின் புதிய கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை இ.தொ.காவின் உப தலைவரும், பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் ஆய்வு செய்துள்ளார்.

செந்தில் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டடத்தின் தரை தளம் மற்றும் முதலாம் மாடியின் நிர்மாணப்பணி நிறைவடைந்ததைத் தொடர்ந்து, இரண்டாவது மாடியை நிர்மாணிக்க 11.6 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கம்பஹா பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலும், வகுப்பறைகள் பற்றாக்குறையாலும் மேலதிக மாடிகளை அமைத்து தருமாறு அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் முன்வைத்த கோரிக்கையை ஏற்று, இரண்டு மாடிக் கட்டடம் செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## 2021 இல் இறக்குமதி 21.6 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பு – கப்ரால்

2021 ஆம் ஆண்டில் நாட்டின் இறக்குமதி 21.6 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளன என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

2020 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், கடந்த ஆண்டு இறக்குமதி அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

2019 ஆம் ஆண்டில் இறக்குமதி 19.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியதாக அவர் குறிப்பிட்டார்.

ஆனால், 2020 ஆம் ஆண்டில் அது 16.1 பில்லியனாக குறைந்துள்ளன என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் சுட்டிக்காட்டினார்.

## மேல் மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் காலமானார்



மேல் மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் கித்சிறி கஹட்டபிட்டிய நேற்று (திங்கட்கிழமை) காலமானார்.

கொரோனாத் தொற்று உறுதியாகி அவர் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையில் சுமார் 20 நாள்களாக சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்றிரவு காலமானார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

60 வயதாகும் கித்சிறி கஹட்டபிட்டிய, ஐக்கிய மக்கள் சக்தியின் புலத்சிங்கள தொகுதி அமைப்பாளராக அவர் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாக்குறுதிகளை வழங்கி விட்டு ஆட்சிக்கு வந்தவர்கள் எங்கே?

## எம். உதயகுமார் எம்.பி. கேள்வி

மலையகத்தில் தனிவீட்டுத் திட்டத்தை முன்னெடுக்காத தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சு தற்போது கோதுமை மாவை விநியோகிக்கப் பார்க்கின்றது. மாவை விநியோகிப்பதற்கு மலையகத்துக்கு எதற்கு அமைச்சு, இது தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சா அல்லது மாவு விநியோக அமைச்சா? என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம். உதயகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

இராகலை, வலப்பனை நகர மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

மக்களுக்குப் போலியான வாக்குறுதிகளை வழங்கி விட்டு ஆட்சிக்கு வந்தவர்கள் தற்போது எங்கிருக்கின்றனர் எனத் தெரியவில்லை. அத்தியாவசியப் பொருள்கள் உட்பட எல்லாப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. அதுமட்டுமல்ல பொருள்களை வாங்குவதற்கு வரிசையில் நிற்கவேண்டிய நிலைமையே காணப்படுகின்றது.

இனிவரும் நாள்களில் எரிபொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்படலாம். அரிசி விலையும் சடுதியாக அதிகரிக்கப்படலாம். இவ்வாறு நாட்டு மக்களை இந்த ஆட்சியாளர்கள் படுபாதாளத்தில் தள்ளிவிட்டுள்ளனர். அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனியார் துறையினருக்கு அந்தக் கொடுப்பனவை வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதனை நாம் வரவேற்கின்றோம். ஆனால், நாட்டில் வருமானம் இன்றி, பணத்தை அச்சிட்டு இவ்வாறு கொடுப்பனவுகள் வழங்குவதால் பிரச்சினைகள் தீராது. அது மேலும் நெருக்கடியையே ஏற்படுத்தும்.

அதேபோல ஏனையோருக்கு 5 ஆயிரம் வழங்கப்படும் போது தோட்டத் தொழிலாளர்களுக்கு வெறும் 500 ரூபாவுக்கு நிவாரணம். அதுவும் கோதுமைமா. அந்த கோதுமைமாவைக்கூட தோட்ட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு ஊடாக விநியோகிக்கப்படும் என அந்த இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்.



மலையகத்தில் இன்னும் ஒரு வீட்டைக்கூடக் கட்டாத அந்த அமைச்சர், மாவை விநியோகித்து அரசியல் செய்யப் பார்க்கின்றார். திகாம்பரம் கட்டிய வீடுகளுக்குத்தான் அவர்கள் இன்று திறப்பு விழா நடத்துகின்றனர்.

மாவை விநியோகிக்க மலையகத்துக்கு எதற்கு அமைச்சு? அது தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சா அல்லது மாவு விநியோக அமைச்சா? அதேவேளை, மக்களால் விரைவில் இந்த அரசு விரட்டி அடிக்கப்படும். தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஆசியுடனேயே புதிய ஆட்சி மலரும். அதில் பலம் பொருந்திய அமைச்சராக திகாம்பரம் இருப்பார். - எனத் தெரிவித்துள்ளார்.

## கோழி இறைச்சி, முட்டைக்கு வரும் நாள்களில் தட்டுப்பாடு?

எதிர்வரும் நாள்களில் முட்டை மற்றும் கோழி இறைச்சிக்கு தட்டுப்பாடு ஏற்படும் என அகில இலங்கை கோழிப் பண்ணை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

கால்நடை தீவனம் கிடைக்காததால் முட்டை மற்றும் கோழி உற்பத்தியாளர்கள் கடும் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றனர். கால்நடை தீவனம் விரைவில் வழங்கப்படாவிட்டால் தட்டுப்பாட்டு நிலையை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பண்டிகை காலங்களில் கோழி இறைச்சிக்கு அதிக கிராக்கி இருந்ததால் விலையும் வேகமாக உயர்ந்தது. எவ்வாறாயினும், தேவை குறைவடைந்ததன் காரணமாக கோழி மற்றும் முட்டையின் விலைகள் வீழ்ச்சியடைந்து வருகின்றன என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஒமிக்ரோன் சுனாமிக்கு தயாராகும் சுகாதார பிரிவினருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜன.11

நாட்டினுள் ஒமிக்ரோன் வைரஸ் சுனாமி போன்று வேகமாகப் பரவும் அவதானம் ஏற்பட்டால் அதற்காக வைத்தியசாலை கட்டமைப்புகளை தயார் நிலையில் வைக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ரஞ்சித் பதுவன்துடாவ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலை கட்டமைப்பிற்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கையை சமாளிக்க முடியாமல் போனால் வீட்டில் வைத்து சிகிச்சை வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு விசேட வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அதற்காக தொற்றாளர்கள் 1390 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் ஒமிக்ரோன் வைரஸ் உலகம் முழுவதும் 124 நாடுகளுக்கும் அதிகமாகப் பரவியுள்ளது. இந்தியாவின் புதுடெல்லி நகரத்தில் இதுவரையில் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இந்த வைரஸ் ஆபத்தான நிலைமையை வெளிப்படுத்திய போதிலும் தற்போது வரையில் வைத்தியசாலையில் சேர்க்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையும் மரணிப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்துள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எரிவாயு கசிவு வெடிப்புக்கள் குறித்து இதுவரை உரிய விசாரணை இல்லை

### முஜிபுர் ரஹ்மான் சாடல்



எரிவாயு கசிவு வெடிப்புக்கள் தொடர்பில் இதுவரையில் உரிய விசாரணை நடத்தப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

எரிவாயு கசிவு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் இதுவரையில் காத்திரமான விசாரணை முன்னெடுக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், அரசாங்கத்தையோ அல்லது ஜனாதிபதியையோ விமர்சனம் செய்யும் நபர்களைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் உடனடியாக விசாரணை செய்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

எரிவாயு கசிவு தொடர்பில் லிற்றோ நிறுவனத்தின் ஒரு பிரதிநிதியை அழைத்து விசாரணை செய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு முடியாது போயுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எரிவாயு சிலிண்டர்களின் கலவையில் ஏற்பட்ட மாற்றங்கள் அரசியல்வாதிகளுக்கு முன்கூட்டியே தெரிந்திருந்ததா என்ற சந்தேகம் எழுகின்றது என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

லிற்றோ எரிவாயு நிறுவனத்துக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுப்பது அரசியல் ரீதியாக அழுத்தங்கள் தடுத்து வருவதாக முஜிபுர் ரஹ்மான் குற்றம் சுமத்தியுள்ளார்.

## ஜனவரி 26 இல் மீண்டும் திறக்கிறது சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம்!

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி மீள ஆரம்பிக்கத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்மாதம் 23ஆம் திகதி கச்சா எண்ணெய்த் தொகுதி இலங்கைக்கு வரவுள்ளது என எரிசக்தி அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர்.வோல்கா தெரிவித்துள்ளார்

இதனை அடுத்து சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக கச்சா எண்ணெயை கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஜனவரி 03 ஆம் திகதி தற்காலிகமாக மூடப்பட்டது.

எவ்வாறாயினும், சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டாலும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என எரிசக்தி அமைச்சு உறுதியளித்துள்ளது.

## எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அடுத்தது பொதுத்தேர்தல் என்கின்றார் மைத்திரி!

சமூக முற்போக்கு, நேர்மையான அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டணியாக எதிர்வரும் தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ளவுள்ளதாக சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

மாத்தறை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் உரையாற்றிய போதே கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

மேலும் எந்தவொரு தனிநபராலும் தனித்து ஆட்சி அமைக்க முடியாது என்றும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படாது எனத் தெரிவித்த அவர், மாகாணசபைத் தேர்தல்கள் இந்த வருட இறுதியிலோ



அல்லது அடுத்த வருட ஆரம்பத்திலோ நடத்தப்படும் எனக் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த தேர்தல் நாடாளுமன்றத் தேர்தலாகவே அமையும் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# 'மொட்டு' அரசுக்குள் இருந்துகொண்டு எதிரணி வேலையைச் செய்யக்கூடாது

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கடும் சீற்றம்



அரசுக்குள் இருந்துகொண்டு எதிரணி வேலையை செய்ய முடியாது. அதேபோல் ஒரு அரசுக்குள் பல அரசுகள் செயற்படவும் முடியாது.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் பதிலடி கொடுத்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

அரசுக்குள் இருந்துகொண்டு விமர்சனங்களை முன்வைக்க முடியும். எனவே, விமர்சனங்களை முன்வைப்பவர்களை விலக்குவதற்குப் பதிலாக, தீர்வுகளை வழங்குவதே பொருத்தமான நடவடிக்கையாகும் என்று ஜனாதிபதி பதவியை வகித்த ஒருவர் விமர்சித்துள்ளார். அவரின் இந்தக் கருத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உடன்படாது.

விமர்சிக்கும் உரிமை இருக்கின்றது. ஆனால், அதற்குப் பொருத்தமான இடங்களும் உள்ளன. அரசுக்குள் உள்ள பிரச்சினைகளை நாடாளுமன்றக் குழுக் கூட்டங்கள் மற்றும் அமைச்சரவையில் சுட்டிக்காட்டலாம் அல்லது தலைவர்களைத் தனிப்பட்ட ரீதியில் சந்தித்துப் பேசலாம். அதைவிடுத்துப் பொதுவெளியில் விமர்சிப்பது ஏற்புடைய நடவடிக்கையாக அமையாது - என்றார்.

# முள்ளியவளை பெண் படுகொலை; தகாத உறவைப் பேணியவர் கைது



முள்ளியவளை, பூதன் வயல் கிராமத்தில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட குடும்பப் பெண் படுகொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதியன்று முள்ளியவளை பூதன்வயல் பகுதியில் தென்னந்தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து உருக்குலைந்த நிலையில் 36 வயதுடைய குடும்பப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த முள்ளியவளைப் பொலிஸார், குறித்த பெண்ணுடன் தகாத உறவைப் பேணி வந்த 33 வயதுடைய கிளிநொச்சி, ஜெயபுரத்தைச் சேர்ந்த இளைஞரை நேற்றுமுன்தினம் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

முல்லைத்தீவு நீதிவான் ரி.சரவணராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குறித்த நபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

### கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்கரைகளில் இரண்டு ஆண்களின் சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.

### பாதையை மாற்றா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அரசு தற்போது எதிர்நோக்கும் அரசியல் நெருக்கடி தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராஜாங்க அமைச்சர்களையோ அல்லது அமைச்சர்களையோ பதவி நீக்கம் செய்வதால் அல்லது அமைச்சுக்களின் பொறுப்புக்களை கைமாற்றம் செய்வதால் அரசின் நெருக்கடியைத் தீர்க்க முடியாது.

நாடு பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துள்ள இன்றைய நிலைமையில் மக்களின் மனதை வெல்லும் வகையில் அரசு செயற்பட வேண்டும் என்பதே பங்காளிகளான எமது நோக்கம். இதற்காகவே நாம் உள்ளுக்குள் இருந்துகொண்டு பாடுபடுகின்றோம். வெளியாள்களுடன் சேர்ந்து அரசை வீழ்த்துவது எமது நோக்கமல்ல.

எனினும், அரசு தற்போது பயணிக்கும் பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் கவிழ்வது உறுதி. ஆனால், இந்த அரசு வீழ்வது எப்போது என்று இப்போது கூற முடியாது. அரசின் நகர்வுகளைப் பொறுத்தே அதன் முடிவு தங்கியிருக்கும்.

ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து - ஆழமாக ஆலோசித்து நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுள்ள சிறந்த தீர்மானங்களை எடுக்க வேண்டும் - என்றார்.

### பெறுமானம் சேர்க்கின்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்தப் பேரிடர் நேரத்திலும்கூட நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்கள் உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டுவருகின்றனர் எனவும், மின்சாரம், எரிசக்தி அமைச்சு மற்றும் பெற்றோலிய அமைச்சு என்பன கூட்டாக முடிவெடுக்க முடியாத அளவுக்குச் சீரழிந்துள்ளன எனவும் அவர் கூறினார்.

'பிரபஞ்சம்' நிகழ்ச்சியில் நேற்று கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த, அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய திறமையான இளம் தலைமுறையை உருவாக்கும் நோக்கில், வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணனி உபகரணங்களை வழங்கும் முன்னோடித் திட்டமான 'பிரபஞ்சம்' திட்டத்தின் 8 ஆவது கட்டம் நேற்று ஆரம்பமானது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் முற்போக்கு எண்ணக்கருவாக அமைந்த நவீன உலகில் வளமான டிஜிட்டல் எதிர்காலத்துக்காக இந்த நாட்டின் இளைய தலைமுறையைத் தொழில்நுட்பத்தில் தேர்ச்சிபெற்ற, ஸ்மார்ட் கணினிப் பயன்பாட்டில் தேர்ச்சி பெற்ற சமூகமாகக் கட்டியெழுப்பும் 'பிரபஞ்சம்' முன்னோடித் திட்டத்தின் ஏழாவது கட்டத்தில், ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா மதிப்பிலான வகுப்பறைகளுக்கான டிஜிட்டல் கணினித் திரைகள் மற்றும் கணினி உபகரணங்களை கிளிநொச்சி, பரந்தன் இந்துப் பாடசாலைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று வழங்கிவைத்தார்.

# தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலையின் நினைவேந்தல்




(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் 48 ஆவது நினைவேந்தல் நேற்று காலை 10 மணியளவில் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக, யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தில் நினைவஞ்சலி நடத்தப்பட்டது.

இதன்போது அரசியல் கட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்துகொண்டு அஞ்சலியைச் செலுத்தினர்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் விருந்துபசார வைபவத்தின் போது வன்முறைக் கும்பலால் நடத்தப்பட்ட தாக்குதலில் மாநாட்டில் கலந்துகொண்டிருந்த 11 பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆட்சிக் காலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறக்கூடாது எனக் கண்டியில் வைத்து இளைஞர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார்' என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருத்து கருத்து வெளியிட்டிருந்தார் .

இதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தறை மாவட்டக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்ததாவது:-

எந்தவொரு தலைவருக்கும் தனித்து அரசை நிர்வகிக்க முடியாது. அதேபோல் நாட்டை முன்னோக்கி அழைத்துச் செல்லவும் முடியாது. சிறந்த குழுவொன்று இருந்தால்தான் அது சாத்தியப்படும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மொட்டுக் கட்சியினர் தேடி வந்தனர். மொட்டுக் கட்சியின் முதல்நிலை தலைவர்கள்கூட தனித் தனியே வந்து என்னைச் சந்தித்தனர். இதன்பிரகாரம் கூட்டணி அமைத்துத் தேர்தலை எதிர்கொண்டோம். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற முதல் வாரமே கூட்டணி ஒப்பந்தத்தை மீறிச் செயற்பட்டனர். கடையிசியில் கறிவேப்பிலையின் நிலைதான் எமக்கு. நன்றாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

தாய்மையான ஆட்சியை முன்னெடுக்கத் தனிமனிதனாகப் போராடினேன். அப்போதுகூட நாட்டை இவ்வாறானதொரு நிலைக்கு நான் தள்ளிவிடவில்லை. நல்லாட்சியின்போது பொருள்கள் குறைந்த விலைக்கு வழங்கப்பட்டன. எரிபொருள் விலைகூட ஓரிரு ரூபாவால்தான் அதிகரிக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துகூட மொட்டு கட்சித் தலைவர்கள் சைக்கிளில் பவனி வந்தனர். பொருள்களைக் காண்பித்து இப்போது சந்தோஷமா எனக் கேட்டனர். ஆனால் இன்று என்ன நடக்கின்றது?

இவ்வருட இறுதியில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம். அதன்பின்னர் நிச்சயம் தேசியமட்டத் தேர்தல் என்றால் அது நாடாளுமன்றத் தேர்தலாகவே அமையும். சிலர் சர்வஜன வாக்கெடுப்பு பற்றி அங்கும், இங்கும் கதைக்கின்றனர். நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடித்துக்கொள்வதற்கு ஜே.ஆர். ஜெயவர்தனவும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினார். எனவே, சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி, அரசின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு முற்பட வேண்டாம். அது ஒருபோதும் நடக்காது - என்றார்.

### ஜன.18 முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு வீட்டில் வழங்கக்கூடிய மருத்துவ பராமரிப்பு சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தத் திட்டமானது பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை போன்ற ஆதார மருத்துவமனைகள் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளது .

இந்தச் சிறப்பு பராமரிப்பு தேவையானவர்கள் தமக்கு அருகில் உள்ள மேற்கூறப்பட்ட மருத்துவமனைகளில் ஏதாவது ஒன்றுக்குரிய கீழே வழங்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களுக்கு (பருத்தித்துறை ஆதார மருத்துவமனை - 021226 3262, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை - 021 205 9227, சாவகச்சேரி ஆதார மருத்துவமனை - 021227 1150, ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை - 021 2211660) காலை 8 மணி முதல் மாலை 4 வரை அழைப்பதன் மூலம் தமக்கு வழங்கப்பட வேண்டிய பராமரிப்பை முன்பதிவு செய்ய வேண்டும்.

அதன்பின் அந்த மருத்துவமனையில் இருந்து மருத்துவ பராமரிப்புக் குழுவினர் நோயாளியின் வீட்டுக்கு வருகை தந்து அவர்களுடைய நோய் நிலைமையை ஆராய்ந்து வீட்டில் வழங்கக்கூடிய மருத்துவ பராமரிப்பை வழங்குவார்கள்.

இந்தச் சேவை மூலம் அவசர மருத்துவ சேவை எதுவும் வழங்கப்பட மாட்டாது .

இந்தச் சேவை மூலம் அவசர தேவைகள் அற்ற பராமரிப்பு மட்டுமே வழங்கப்படும். (உதாரணமாக - உணவு வழங்கும் குழாய், சிறுநீர் குழாய் மாற்றுதல், மருந்து கட்டுதல், வீட்டில் வழங்கக்கூடிய இயன் மருத்துவ சேவைகள் போன்றவை)

அவ்வாறு குறித்த நோயாளிகளுக்கு அவசர மருத்துவ தேவைகள் ஏற்படின் 1990 அவசர அம்புலன்ஸ் சேவையை அழைப்பதன் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முடியும் - என்றுள்ளது.

### சஜித்தின் கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் நல்லாட்சியை மைத்திரிபால சிறிசேனவே குழப்பினார். அவர் எப்படிப்பட்டவர் என்பது மக்களுக்குத் தெரியும். இனியும் அவரால் மக்களை ஏமாற்ற முடியாது.

தான் பொலனறுவைக்குச் சென்றுவிடுவேன் என அறிவிப்பு விடுத்த மைத்திரிக்கு தற்போது மீண்டும் பதவி ஆசை வந்துள்ளது. அதனால்தான் புதிய பயணம் பற்றிக் கதைக்கின்றார். அவரின் கனவு நனவாகாது. அவருடன் எமக்கு கொடுக்கல் - வாங்கல் கிடையாது. கூட்டணி என்ற பேச்சுக்கும் இடமில்லை - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வனவள, ஜீவராசிகள் திணைக்களங்களின் வசமிருந்த காணிகளை விடுவிக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை!

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் காணிகளை பயிர்ச்செய்கை மற்றும் பொருளாதார மேம்பாட்டு முயற்சிகளுக்காக விடுவிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த கோரிக்கைக்கு அமைவாக திணைக்கள அதிகாரிகள் காணிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆராய்ந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் கீழிருக்கும், முன்னர் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டு பின்னர் வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்ட காணிகள் தொடர்பான விவரமான பட்டியலுடன், மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் அவற்றை விடுவிப்பதற்கான கோரிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சமர்ப்பித்திருந்தார்.

இதனை அமைச்சரவையில் சமர்ப்பித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த வேண்டுகோளை ஏற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜக்ஷ, இவைபற்றி ஆராய்ந்து பொருத்தமான காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு காணி அமைச்சரைப் பணித்திருந்தார்.

இதன் பிரகாரம், காணிகளைப் பார்வையிட்டு அவற்றை விடுவிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் உயரதிகாரிகள் கிளிநொச்சிக்கு வருகைதந்து களப் பயணங்களை மேற்கொண்டிருந்தனர்.

கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ்



தேவானந்தாவின் இணைப்பாளர் வை.தவநாதன் மற்றும் மேலதிக இணைப்பாளர் கோ.றுாங்கன் ஆகியோரின் தலைமையில், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளுடன் மேற்படி அதிகாரிகள், விடுவிக்குமாறு கோரப்பட்ட காணிகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவின்கீழ், பொன்னகர், கண்ணகைபுரம், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளிலும், பூநகரி பிரதேச செயலக பிரிவில் ஜெயபுரம், பண்டிவெட்டி, கரியாலைநாகபடுவான், திக்குவில், பள்ளிக்குடா ஆகிய பகுதிகளிலும் உள்ள காணிகளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ.றுாங்கன் தலைமையில் செயலக அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்ட வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அவற்றில் விடுவிக்கப்படக்கூடிய காணிகள் பற்றி விரிவாக ஆராய்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அறிக்கையிட்டனர்.

இதேபோல், கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் புளியம்பொக்கணை, கல்மடு ஆகிய பகுதிகளுக்கும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் கோவில்வயல் பகுதிக்கும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளர் வை.தவநாதன் தலைமையில் செயலக அதிகாரிகளுடன் சென்ற வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அந்தக் காணிகளை விடுவிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுக்கு அறிக்கையிட்டனர்.

ஆனைவிடுந்தான், கண்ணகைபுரம், கரியாலைநாகபடுவான் ஆகிய பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்வதற்கும், பள்ளிக்குடா பகுதியில் புல் வளர்த்து கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் அனுமதிக்குமாறு விடுவிக்கப்பட்ட கோரிக்கையை சாதகமாகப் பரிசீலித்துள்ள அதிகாரிகள், ஏனைய கோரிக்கைகள் தொடர்பாக மேலதிகாரிகளுடன் கலந்துரையாடி காலக்கிரமத்தில் அவற்றை விடுவிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்பாக அறிக்கையிடுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் உறதியளித்தனர்.

முன்னதாக, ஜெயபுரம் பகுதியில் 130 ஏக்கர் காணியை வனவளத் திணைக்களத்திடமிருந்து விடுவித்து நெற்செய்கை மேற்கொள்வதற்காக காணிகளற்றவர்களுக்கு வழங்கியிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கௌதாரி முனைப் பகுதியிலுள்ள சுமார் 100 ஏக்கர் அரச காணியை அந்தப் பகுதியிலுள்ள காணிகளற்றவர்கள் நெற்செய்கை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்ததுடன், நீண்டகாலம் தனியாரின் அத்துமீறிய ஆக்கிரமிப்பின் கீழிருந்த ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டக் காணியில் சுமார் 150 ஏக்கர் பகுதியில் தற்காலிகமாக காலபோகம் செய்வதற்கு அந்தப் பகுதியிலுள்ள காணிகளற்றவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மது, சிகரட்டின் விலைகள் அதிகரிக்கப்படும் சாத்தியம்

எதிர்வரும் சில நாள்களில் மதுபானம் மற்றும் சிகரெட்டின் விலையை அதிகரிப்பது தொடர்பில் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பல பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு சிறப்பு சந்தைப் பொருள் மற்றும் சேவை வரியை விதிக்கும் அரசாங்கத்தின் முடிவிற்கு அமைய இந்த விலை அதிகரிப்பு இடம் பெறலாம் என நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

சிறப்பு சந்தைப் பொருள் மற்றும் சேவை வரி விதிப்பது தொடர்பில், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முன் வைத்த யோசனைக்கு ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், மிக விரைவில் மதுபானம், சிகரெட்டுக்களின் விலைகளில் மாற்றம் ஏற்படும் என அந்தத் தகவல்கள் சுட்டிக்காட்டின.

மதுபானம், சிகரெட்டுகள், சூதாட்டம் மற்றும் சூதாட்ட விடுதிகள் போன்றவை தொடர்பில் சிறப்பு சந்தைப் பொருள் மற்றும் சேவை வரியை விதிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. எனினும் குறித்த வரியின் வீதம் இதுவரை இறுதி செய்யப்படாத நிலையில், நாடாளுமன்றுக்கு சட்ட மூலம் ஒன்றைக் கொண்டு வந்து வரியை அமுல் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறிய முடிகிறது.

## கனரக வாகனம் - பஸ் மோதி விபத்து; மூதூரில் 27 பேர் வைத்தியசாலையில்!





திருகோணமலை – மூதூர், பட்டித்திடல் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 27 பேர் காயமடைந்துள்ளனர் என மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) காலை 7.35 மணியளவில் மூதூர் – மட்டக்களப்பு பிரதான வீதியின் பட்டித்திடல் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

அம்பாறையில் இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த பயணிகள் பஸ் ஒன்றும் கனரக வாகனமும் மோதியே விபத்து இடம்பெற்றுள்ளது.

இதனால் இரண்டு வாகனங்களினதும் சாரதிகள் உள்ளடங்கலாக மொத்தம் 27 பேர் காயமடைந்துள்ள நிலையில் மூதூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பண நோட்டுகள் அச்சிடுவதை நிறுத்த மத்திய வங்கி திட்டம்

தொடர்ந்தும் பண நோட்டுக்களை அச்சிடுவதை நிறுத்திக்கொள்ள இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது என அறியமுடிகிறது. பண நோட்டுக்களை அச்சிடுவதற்குப் பதிலாக, தேவையான பணத்தை நிதிச் சந்தையிலிருந்து பெற மத்திய வங்கி திட்டமிட்டுள்ளது.

அதன்படி, அடுத்து வரும் ஒரு மாதத்துக்குள், வங்கி வட்டி வீதங்கள் உயர்வடையலாம் என மத்திய வங்கியின் உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன.

தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் காலத்தில் மட்டும், சுமார் 1.3 ட்ரில்லியன் ரூபா பணம் புதிதாக அச்சிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அவ்வாறு பணம் வரையறை இன்றி அச்சிடப்பட்டதால் நாட்டில் பண வீக்கம் அதிகரித்துள்ளதாகவும் பல தரப்புக்களும் குற்றம் சாட்டி வரும் நிலையிலேயே, மத்திய வங்கி புதிதாக பண நோட்டுக்களை அச்சிடும் நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்வது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளதாக அறிய முடிகிறது.

அரசாங்கம் கடந்தவாரம் அறிவித்த நிவாரணத் திட்டங்களை நடைமுறைப்படுத்த, சுமார் 2 ஆயிரத்து 300 கோடி ரூபா வரை தேவைப்படும் நிலையில், அந்நிதியில் ஒரு பகுதியை உள் நாட்டு நிதிச் சந்தையிலிருந்து பூர்த்தி செய்துகொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு வருடமாக சிறுமி துஷ்பிரயோகம் காத்தான்குடி இளைஞர் கைதானார்

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தில் 16 வயதுடைய சிறுமி ஒருவரை ஒரு வருடகாலமாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திவந்த சிறுமியின் எதிர் வீட்டைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரை ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் 16 வயது சிறுமியின் தாயார் சுகவீனம் காரணமாக படுக்கையில் இருந்துவருகின்றார்.

இந்த நிலையில் கடந்த ஒருவருடத்துக்கு முன்னர் சிறுமி 15 வயதாக இருக்கும் போது சிறுமியின் எதிர் வீட்டில் உள்ள இளைஞனை திருமணம் முடிப்பதற்கு பேச்சுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் குறித்த இளைஞன் திருமணப் பேச்சு இடம்பெற்ற காலத்தில் இருந்து கடந்த ஒருவருடகாலமாக சிறுமியை பாலியல் துஷ்பிரயோம் செய்துவந்த நிலையில் தற்போது சிறுமியை திருமணம் முடிக்க முடியாது என இளைஞர் மறுப்பு தெரிவித்ததையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கமைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிசார் குறித்த இளைஞனைக் கைது செய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட இளைஞனை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.01.2022இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# வெற்றுப் போத்தலுக்கு 10 ரூபா சதொசவில் திட்டம் அறிமுகம்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் லங்கா சதொச நிறுவனம் புதிய தண்ணீர் போத்தல் ஒன்றை சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளது.

இது குறித்து பந்துல குணவர்தன தெரிவிக்கையில் – இந்த குடிதண்ணீர் போத்தலை 35 ரூபா விற்கு விற்கிறோம். அத்தோடு லங்கா சதொச நிறுவனம் மூலம், நாட்டின் அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களையும் இணைக்கும் விதமாக லங்கா சதொச நிறுவனம் இந்த செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது.

ஒரு வெற்று போத்தலைத் திருப்பிக் கொடுத்தால் 10 ரூபா கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

அத்தோடு, இந்த முயற்சியின் மூலம் நாடு முழுவதும் குறைந்த விலையில் குடிதண்ணீர் போத்தல்கள் கிடைப்பதுடன், சுற்றுச்சூழலில் சேர்க்கப்படும் பிளாஸ்டிக்கின் அளவைக் குறைப்பதற்கும் பங்களிக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார். 'இதன் மூலம், மற்ற குடிதண்ணீர் போத்தல்துயாரிக்கும் நிறுவனங்களுக்கு சவால் விட நாங்கள் விரும்பவில்லை. ஆனால், அவர்களும் இந்த போத்தல்களை மீட்டெடுக்கும் முறையைப் பயன்படுத்தினால், அது சூழலுக்கு உகந்த வணிகமாகமாறும். – என்றார்.



# நடிகர் காமினி காலமானார்!

நடிகர் காமினி அம்பலாங்கொட காலமானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட நாளகளாக சுகவீனமுற்றிருந்த அவர் தனது இல்லத்தில் காலமானார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

அவர் தனது 66 ஆவது வயதில் காலமாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கோட்டையின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆராய ஆஸி தூதுவர் மட்டக்களப்பு விஜயம்!

இலங்கையின்மிகப்பழமையானகோட்டைகளில் ஒன்றாகக் கருதப்படும், மட்டக்களப்பு கோட்டையின் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் வகையில் இலங்கைக்கான ஆஸ்திரேலியா நாட்டின் தூதுவர் டேவிட் கொலின் மட்டக்களப்பிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 400 வருடங்கள் பழைமை வாய்ந்த மட்டக்களப்பு கோட்டையை ஆஸ்திரேலியாவின் நிதியுதவியுடன் புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இது தொடர்பில் ஆராயும் வகையிலேயே இலங்கைக்கான ஆஸ்திரேலியா நாட்டின் தூதுவர் டேவிட் கொலின் மட்டக்களப்பிற்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டார். அவரை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் வரவேற்றதை தொடர்ந்து குறித்த கோட்டையின் புனரமைப்பு பணிகள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது 2019 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னெடுக்கப்பட்டுவரும் கோட்டை புனரமைப்பு பணிகள் பூர்த்தியடைந்ததும் குறித்த கோட்டையைச் சுற்றுலாத்தளமாக மாற்றும் வகையிலான செயற்பாடுகள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது. டச்சுக் கோட்டை கட்டுவதற்கான ஆரம்பப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 400 ஆண்டு நிறைவை முன்னிட்டு, திறன் உள்ளடங்கிய அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் எஸ்4ஜஜி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட விசேட



நூல் மற்றும் மட்டக்களப்பு டச்சுக் கோட்டையின் அபிவிருத்தி எனும் நூலும் ஆஸ்திரேலிய உயரிஸ்தானிகர் டேவிட் ஹெலியிடம் இதன்போது கையளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த் உள்ளிட்ட மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், எஸ்4ஜஜி நிறுவனத்தின் முகாமையாளர் எஸ். மரீனா, எஸ்4ஜஜி நிறுவனத்தின் பிரதி குளுத் தலைவர் கமலநாதன் ஜெயதாஸ் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் பலர் பிரசன்னமாயிருந்தனர். இதன்போது நினைவுப் பரிசுகள் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உல்லாசப் பயணத் திட்டங்கள் பலவற்றுக்கு உதவி வழங்குவதற்கு ஆஸ்திரேலிய தூதுவர் இணக்கம் தெரிவித்துள்ளார் என மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்தார்.

# வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி கடற்கரையில் இரண்டு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டன!

வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி கடற்கரையில் அடையாளம் தெரியாத இரு சடலங்கள் நேற்று (திங்கட்கிழமை) கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வெள்ளவத்தை கடற்கரை பகுதியில் நிர்வாணத்துடன் ஆணின் சடலம் கரை ஒதுங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றைய சடலம் பம்பலப்பிட்டி மெரைன் டிரைவ் கடற்கரையில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த இரு சடலங்களும் இதுவரையில் அடையாளம் காணப்படாத நிலையில், வெள்ளவத்தை மற்றும் பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒமிக்ரோன் பரப்பிய பெண்ணுக்கு அபராதம்!

இலங்கையில் ஒமிக்ரோன் மாறுபாட்டால் பாதிக்கப்பட்ட நிலையில் அடையாளம் காணப்பட்ட முதலாவது பெண்ணுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மாரவில பிரதேசத்தை சேர்ந்த பெண் மற்றும் அவரது கணவருக்கு நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது. கொவிட் தொற்றியுள்ளமை தொடர்பாக அறிவிக்காத குற்றச்சாட்டின் கீழ் மாரவில நீதிமன்றத்தால் 12 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த தம்பதி கடந்த மாதம் 5 ஆம் திகதி தென்னாபிரிக்கா நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்துள்ளனர்.

அத்துடன்குறித்த இருவரும் கொவிட் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாமல் வெளிநாட்டு பயணங்கள்மேற்கொண்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.





# 364 கடற்படையினரின் வெளியேறல் அணிவகுப்பு

இலங்கை நிரந்தர மற்றும் தொண்டர் கடற்படையின் 243 ஆம் ஆட்சேர்ப்புக்கு சொந்தமான 364 கடற்படை வீரர்கள், அவர்களின் அடிப்படை பயிற்சியை பூர்த்தி செய்து ஜனவரி 8 ஆம் திகதி பூனாவை கடற்படை கப்பல் சிக்ஷா நிருவனத்தில் நடந்த அணிவகுப்பு வைபவத்தின் போது வெளியேறிச் சென்றனர்.

வட மத்திய கடற்படை கட்டளையின் தளபதி ரியர் அட்மிரல் பந்துல சேனாரத்ன இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துசிறப்பித்தார்.

மேலும் இந்தப் பயிற்சியின்போது சிறந்து விளங்கிய வீரர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அதன் படி 243 ஆவது ஆட்சேர்ப்பில் சிறந்த பயிட்சியாளருக்கான விருதை கடற்படை வீரர் அய்.என்.எஸ் குணவர்தன பெற்றுள்ளார். சகல பாடங்களின் அதிக புள்ளிகளை பெற்றதற்கான விருதை கடற்படை வீரர் கே.எச்.டீ.எஸ் விக்கிரமசிங்க பெற்றுள்ளார்.

மேலும், கடற்படை வீரர் எம்.ஏ.எஸ்.டீ வீரசிங்க சிறந்த துப்பக்கியாளருக்கான விருதைப் பெற்றுள்ளதுடன் என்.பி.டீ சாரங்க சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை பெற்றுள்ளார். மேலும், 243 ஆவது ஆட்சேர்ப்பின் சிறந்த பிரிவாக பெரகும்பா பிரிவு விருது பெற்றுள்ளது.

243 ஆவது ஆட்சேர்ப்பின் வீரர்களுடைய கவர்ச்சிகரமான நிகழ்வுகளில் மற்றும் கடற்படை கலாசார பிரிவினரால் சமர்ப்பிக்கப்பட்ட கலாசார நிகழ்ச்சியின் பின் குறத்த வெளியேறல் அணிவகுப்பு நிறைவடைந்தது. கொவிட் -19 பரவுவதைத் தடுக்க வழங்கப்பட்ட அனைத்து சுகாதார நடவடிக்கைகளையும் பின்பற்றி மேற்கொள்ளப்பட்ட, இந்த வெளியேறல் அணிவகுப்புக்காக மகாசங்கத்தினர் மற்றும் அனைத்து மதகுருமார்கள், இலங்கை கடற்படை கப்பல் சிக்ஷா நிறுவனத்தில் கட்டளை அதிகாரி கொமடோர் வருன பிரிடினேன்டா்ஸ் உட்பட கடற்படையின் மூத்த மற்றும் இளநிலை உத்தியோகத்தர்கள், முப்படையினர் மற்றும் பயிற்சி முடித்து வெளியேறும் வீரர்களின் குடும்பத்தினர் எனப் பலர் கலந்துக்கொண்டனர்.